செ.வெ.எண்:465 நாள்:06.09.2019

# ஊரக ஊடகவியலாளர் பயிலரங்கம் மத்திய மாநில அரசு திட்டங்கள் பற்றிய தகவல்களை பத்திரிக்கைகளும் ஊடகங்களும் பொது மக்களிடையே கொண்டு சேர்க்க வேண்டும் என்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்

திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையத்தில் இன்று (06.09.2019) நடைபெற்ற மத்திய அரசு தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்தில் கீழ் செயல்படும் பத்திரிக்கை தகவல் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த ஊரக ஊடகவியலாளர் பயிலரங்கத்தை துவக்கி வைத்துப் சிறப்புரை ஆற்றினார்கள்

மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது

அரசு திட்டங்களின் பயன்களை மக்களிடம் கொண்டு சேர்க்க மாவட்ட நிர்வாகத்திற்கு உதவிட வேண்டும் என்றார். சில திட்டங்களை செயல்படுத்துவதில் சிரமங்கள் இருக்கலாம். ஆனால் அந்த திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க என்ன செய்ய வேண்டும் என்று பத்திரிக்கைகள் தங்களது செய்தி கட்டுரைகள் மூலம் எடுத்துரைக்கலாம் என்று குறிப்பிட்டார். செய்திகளின் திட்டங்கள் பற்றிய விவரங்களை வெளிப்படும் போது மிகுந்த கவனத்துடன் நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொணடார். அரசுகள் மாறி மாறி, வந்தாலும் மக்கள் நலத்திட்டங்கள் தொய்வின்றி செயல்படுத்தப்பட ஊடகங்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டடினார். I.A.S உள்ளிட்ட போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் மாணவ மாணவியருக்கு செய்தித்தாள் கட்டுரைகள், பொது அறிவு விசயங்கள் படிக்கவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் மாவட்ட ஆட்சியர் தொரிவித்ததார். மக்கள் அன்றாட விசயங்களை தெரிந்து கொள்ள, பத்திரிக்கைகள் பேருதவியாக இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். முன்னதாக வரவேற்புரை, மற்றும் பயிலரங்கின் நோக்க உரை ஆற்றிய சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் திரு.ஏ.மாரியப்பன் அவர்கள் ஊரக ஊடகவியலாளர் பயிலரங்கம் எதற்காக நடத்தப்படுகிறது என்று எடுதுரைத்ததார். மத்திய அரசு திட்டங்கள் கொள்கை ஊரக பகுதி மக்களிடம் கொண்டு சேர்ப்பதால் பத்திரிக்கைகளின் பங்கு பற்றி விளக்கிய அவர் பிரதமமந்திரி வீட்டுவசதி திட்டத்தில் அடுத்த மூன்று ஆண்டுகளில் 1 கோடியே 95 இலட்சம் வீடுகள் கட்டி பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவித்ததார். பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் எழுந்திரு இந்தியா திட்டம், விவசாயிகள் உற்பத்தி அமைப்பு திட்டம், சிறு வணிகர்கள் காப்பீட்டுத்திட்டம், உள்ளிட்டவற்றின் பயன்கள் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்தியா தபால் வங்கி காசேலைகள் பற்றி முதுநிலை கண்காணிப்பாளர் சு.சாந்தகுமார் எடுத்துரைத்தார்.இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முன்னோடி வங்கி திட்ட மேலாளர் எ.வெற்றிவேல்,முத்திரா உள்ளிட்ட நிதிதிட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். -இந்தி இயக்கும், ஊட்டச்சத்து இயக்கும், சிறுபான்மையினார் 15 அம்ச திட்டம் குறித்து விளக்கப்பட்டது. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.செந்தில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.ராமச்சந்திர பிரபு, திரு.மகாகிருஷ்ணன், உட்பட பலர் கலந்து கொண்ட இந்த பயிலரங்கில், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் துணை இயக்குநர் நதீம் துஃபைல், மக்கள் தொர்பு கள அலுவலக அதிகாரி போஸ்வெல், பத்திரிக்கையாளர்கள் கலந்துகொண்டனார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.